1. **நிதிக் கூற்றுக்கள்**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதென நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நம்பிக்கை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல்

மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக் கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதியத்திற்கு மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊடாக நீர், மின்சாரம் மற்றும் அலுவலக இடவசதிகளை பெற்றுக் கொள்ளப்பட்டமைக்காக செலுத்த வேண்டிய பெறுமதியை கணக்கிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக ஆண்டிற்குரிய அச் செலவினங்கள் நிதிச் செயலாற்றல் கூற்றில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்து பேசி சரியான நடைமுறையை தயாரித்து அதற்கேற்ப பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆண்டிற்குரிய அனைத்து செலவினங்களையும் சரியாகக் கண்டறிந்து நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல். |
| (ii) | கணக்காண்டில் நிதியத்தின் செயற்பாடுகளுக்காக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நிதியத்தில் நிரந்தரமாக கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருந்ததுடன், அவர்களின் சேவைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 3,067,810 ஆன சம்பளம் மற்றும் ஊதியம் என்பனவற்றை நிதியத்தின் | வாகன புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் செயற்பாடு களுக்காக சட்ட ரீதியான அங்கீகாரம் மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் மூலம் கிடைத்துள்ளமையால் நிதியத்தினதும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு இடையே கூட்டிணைப்பினை பேணுவதற்காகவும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் சேவை புரிகின்ற புகை பரீட்சித்தல் | ஆண்டிற்குரிய அனைத்து செலவினங்களும் முறையே இனங் காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்படாமை காரணமாக பஆண்டின் மிகை அப் பெறுமானத்தில் மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு இணைக்கப்படுவர். அவர்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நிரந்தர உத்தியோகத்தர்கள என்பதனால் திணைக்களத்தின் ஊடாக சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது. | |
| (iii) | நிதியத்தால் பராமரிக்கப்படும் கணக்கு புத்தகங்கள் மற்றும் ஆவணங்களின் பிரகாரம், 2023 ஜனவரி 01 இல் உள்ளவாறு சொத்துக்கள, இயந்திரங்கள் மற்றும் உபகரண உருப்படிகளில் 3 இன் கிரயம் ரூபா 283,534,928 ஆகவும், திரட்டப்பட்ட தேய்மானம் ரூபா 258,245,984 ஆகவும் இருக்க வேண்டிய நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட குறிப்பு இலக்கம் 01 இல் ஆதனங்கள் பொறிகள் மற்றம் உபகரணங்கள் கிரயம் ரூபா 230,008,038 மற்றும் திரட்டப்பட்ட தேய்மானம் ரூபா 204,718,592 எனக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் ஆதனங்கள் பொறிகள் மற்றம் உபகரணங்களில் உள்ளவாறு உரிய பெறுமதி பிரதிபலிக்கவில்லை. | இக்கணக்கீட்டுக் குறைபாடு கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறை களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (iv) | நிதியத்தினால் 2018 திசெம்பர் 17 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த் ரூபா 129.99 மில்லியன் மொத்த கிரயமான வளி தரத்தினை அளக்கும் உபகரணங்கள் மூன்றிற்கான ரூபா 17,650 மில்லியனான தேய்வு கணிக்கப்பட்டு நிதிக் கூற்றினுள் உள்ளடக்கப்படாமை காரணமாக நடைமுறையல்லாத சொத்துக்கள் மேற்படி கிரயத்தினால் அதிகரித்தும் ஆண்டின் மிகை பெறுமானத்தேய்வு பெறுமதியால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறை களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | நிதியத்தில் காணப்பட்ட ரூபா 47,247,000 கிரயமான சுற்றும் வளியின் தரத்தை அளவிடும் அலகு 2023 மார்ச் 10 ஆந் திகதி தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு யைளிப்பதற்குரிய கணக்கு வைக்கும் போது கையளிப்பு மேற்கொண்ட திகதி வரையான ரூபா 1,786,325 தேய்மானத்தின் பெறுமதியை சீராக்கம் செய்ய வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் பெறுமானத்தேய்வாக ரூபா 3,106,650 கணக்கிடப்பட்டு நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டமையால் ஆண்டின் மிகை ரூபா 1,320,325 வரை குறைவடைந்துள்ளது | மேற்கூறிய நடமாடும் வளி நிலைமை பரீட்சிக்கும் வாகனம் சட்டப்பூர்வமாக கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடம் 2023.03.10 ஆந் திகதி அன்று ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அவர்கள் 2023.03.10 ஆந் திகதி மேற்கண்ட வாகனத்தை பதிவு செய்ய சமர்ப்பிக்காததால், 2023.04.30 ஆந் திகதி கணக்கு புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டது. கணக்கு திருத்தங்களைச் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளேன். | ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறை களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.5.2 நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 17/1615/702/002-xvii ஆம் அமைச்சரவை பத்திரம் மற்றும் 2017 ஆகஸ்ட் 09 ஆந ் திகதி நடத்தப்பட்ட அமைச்சரவை கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 மற்றும் 04 ஆம் பந்திகளின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் புகை பரீட்சிப்பு நிதியத்தினை கலைத்து பொறுப்புக்களை தீர்த்து முடிவுறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சரவை அங்கீகாரம், நிதி அமைச்சின் அங்கீகாரம் அல்லது திறைச்சேரியின் அங்கீகாரமின்றி வரிசை அமைச்சர் ஊடாக நிதியத்தின் பாதீட்டினை அங்கீகரித்துக் கொண்டு நிதியத்தினை நடாத்திச் செல்வதற்கு நிதியத்தின் பொறுப்புச் சபை நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தின் தொடர்ந்து இயங்கும் தன்மை நிச்சயமற்றதென வெளிப்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகன புகை நம்பிக்கை நிதியத்தை கலைப்பது தொடர்பாக, அமைச்சரவைப் பத்திரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான அவதானிப்புக்களை வழங்குமாறு நிதியமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புக்களை வழங்குவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அக்குழு அறிக்கை அமைச்சரவைக்கு வழங்கப்பட்டது. அந்த அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை மீண்டும் நிதியமைச்சின் அவதானிப்புகளுக்கு வழங்கப்பட்டதுடன், நிதி அமைச்சினால் அந்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்து வதற்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டன. அதன் பிறகு, அப்பரிந்துரை அமைச்சரவையால் தேசிய செயற்பாட்டு ஊடகத்திற்கு அனுப்பப்பட்டது அங்குஇந் நிதியத்தை தொடர்ந்து பேணிச் செல்வதற்குப் பதிலாக மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த தீர்மானத்தின் படி, இது தொடர்பான ஆய்வுகளை வழங்குமாறு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு அமைச்சரவை மீண்டும் அறிவித்தது. உரிய அறிவுறுத்தல்களின் | குறித்த சட்ட சூழலில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | பிரகாரம், தேவையான விளக்கங்கள் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டு, தேசிய செயற்பாட்டு ஊடகத்திற்கு அமைச்சரவையினால் அவதானிப்பு அனுப்பப்பட்டதன் பின்னர், தேசிய செயற்பாட்டு அறை அது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றது. | |

### 1.5.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | புகை பரீட்சிக்கும் தனியார் நிறுவனங்கள் இரண்டுடன் ஏற்படுத்திற்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒவ்வொரு வாகனங்களுக்காகவும் அறவிடப்படும் பரீட்சிப்பு கட்டணத்தில் 10 சதவீதம் புகை பரீட்சித்தல் நிதியத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். எனினும் மேற்படி தனியார் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பரீட்சிப்பு எண்ணிக்கைகள், அவர்களினால் அறவிடப்பட்ட கட்டணங்கள் மற்றும் அதன் பிரகாரம் புகை பரீட்சித்தல் நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய வருமானம் தொடர்பாக பரீட்சித்து அரசு பெற வேண்டிய வருமானம் உரிய வண்ணம் பெறப்பட்டதா என உறுதி செய்யப்படாது நடப்பு ஆண்டினுள் இரு நிறுவனங்களினாலும் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 336.47 மில்லியன் பெறுமானம் நிறுவனத்தின் வருமானமாக இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தகவல் அமைப்பை அணுகுவதற்கும், எந்த நேரத்திலும் மேற்கொள்ளப்படும் சோதனைகளின் அளவைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கும் தேவையான கடவுச்சொற்களை புகை பரிசோதனை அலுவலகம் கொண்டுள்ளது. அதன் பிரகாரம் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஒப்பீடுகள் செய்யப்படுகின்றன. மேலும், கணக்காய்வு அலுவலகத்தின் பரிந்துரைகளின் படி, ஒப்பந்தகார புகை பரிசோதனை நிறுவனங்களின் கணினி அமைப்பை கணக்காய்வு செய்வதற்கான ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | வருமானம் முறையாக சான்றுறுதி படுத்தப்பட வேண்டும். |
| (ii) | புகைப் பரிசோதனைகளை நடத்தும் நிறுவனங்கள், நடத்தப்பட்ட சோதனைகள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்குத் தங்கள் கணினி அமைப்புகளை அணுகுவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யவில்லை. தேவைப்படும் சந்தர்ப்பங்களில் தங்கள் கணனிகளை அணுக டொங்கல்கள் (dongle) வழங்கப்பட்டன, ஆனால் அவை சரியாக வேலை செய்யாததால், தகவல்களைப் பெறுவது சிரமமாகிறது. | ஒப்பந்த கம்பனியால் வாகன புகை பரிசோதனை நிகழ்ச்சி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம் செய்வதற்காக தானியங்கி மென்பொருள் நிரல்களை உருவாக்குவதன் மூலம் காற்று மாசு சோதனை திட்டத்தை நிகழ்நிலையில் சரிபார்ப்பதற்காக இரண்டு ஒப்பந்த நிறுவனங்களை அனுமதிக்க வாகன புகை அலுவலகத்திற்கு dongle வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், சாதாரண அலுவலக நேரங்களில், சுமார் 30,000 வாகன புகை பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன, எனவே தரவிறக்கம் மெதுவாக இருக்கும். இந்த தவறை சரி செய்யுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை முறையாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

#### 1.6.1 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| யாதாயினுமொரு குறிப்பிடப்பட்ட பணிக்காக பதவி நிலை அலுவலர்களுக்கு மட்டுமே முன்பணம் வழங்கப்பட வேண்டுமாயினும் மீளாய்வாண்டில், 14 பதவி நிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கு 106 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 2,737,370 பெறுமதியான உடனடி முன்பணம் வழங்கப்பட்டது. அப்பணி முடிவடைந்தவுடன் முற்பணத்தை உடனடியாக மீள்நிரப்ப வேண்டுமாயினும், மீளாய்வாண்டில், 17 அதிகாரிகள் 34 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொண்ட ரூபா 1,183,010- முற்பணத்தை மீள்நிரப்புவதற்கு 21 முதல் 77 நாட்கள் வரை சென்றிருந்தது. | சில நடைமுறை நிகழ்வுகள் காரணமாக தாமதித்ததாகத் தகவல் பெறப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளப்படும் முற்பணத்தை உரிய பணி முடிவடைந்ததும் மீள் நிரப்புவதற்கு ஆலோசனை வழங்கப்படும். | சிறந்த உட் கட்டுப்பாட்டிற்கு தேவையான நடைமுறைகளைத் தீர்மானித்தல் |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 01/2020 ஆம் இலக்க 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 876 (2) (அ) | தற்போது காணப்படும் நிதியத்தின் செயற்பாடு தேசிய தேவை எனத் தோன்றினால், அந்த நிதியம் தொடர்பாக உரிய முறையில் சட்டத்தின் மூலம் முறையாக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படவில்லை எனின், இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்ட ஒரு ஆண்டினுள் பாராளுமன்ற அனுமதி பெறப்பட வேண்டிய போதிலும் அத்தகைய அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | 2018 இல் வாகன புகை பரிசோதனை நிதியத்தை கலைக்கும் தீர்மானத்தை இடைநிறுத்த 2019 பெப்ரவரியில் போக்குவரத்து அமைச்சர், அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்கும் அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தார். அதன் போது நிதியமைச்சரும், போக்குவரத்து அமைச்சரும் கலந்துரையாடி இதற்கான தீர்மானமெடுத்து அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கூறியிருந்தனர். ஆனால் அப்போது நாட்டில் நிலவும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக இது குறித்து தீர்மானம் எடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. ஆனால், அந்த நிதியின் இருப்பிற்காக, திறைசேரிச் செயலாளர், திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஒருவரை, புகை பரிேதனை | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிதியத்தின் தலைவராக நியமித்து, அதன்படி நிதியத்தின் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் இது தொடர்பான விடயங்கள் 2023 ஜனவரியில் அமைச்சரவையில் முன் வைக்கப்பட்டன. நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு குறித்து முடிவெடுப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது மற்றும் அதன் பரிந்துரைகள் அமைச்சரவை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது மற்றும் வாகன மாசு நிதியை மீண்டும் நிறுவுவது தொடர்பாக பிரதமர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள தேசிய செயல்பாட்டு அலுவலகத்தின் பரிந்துரைகள் அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டுள்ளன. | |
| (ii) | நிதிப்பிரமாணம் 877 (2) (உ) | சகல கணக்கீட்டு உத்தியோகத்தர்களாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்பட்டு வழங்கப்படும் கணக்காய்வு அறிக்கையை உள்ளடக்கி வருடாந்த செயலாற்றல் அறிக்கை உரிய ஏற்பாடுகளின் கீழ் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் சபைக்கு முன்வைப்பதற்காக பராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதியத்தின் செயலாற்றல் அறிக்கையைத் தயாரித்து பாராளுமன்றத்திற்கு முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். தற்போது நிதியத்தின் செயலாற்றல் தொடர்பாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப் பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1(அ) | மீளாய்வாண்டிற்காக நிதியம் ரூபா 2,207,265 பெறுமதியான நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்திருந்த போதும் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

-

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 334,633,332 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 252,377,705 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 82,255,627 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் இந்த வளர்ச்சிக்கு ஆண்டின் வருமானம் அதிகரித்தமை பிரதானமாக காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) புகை பரிசோதனை நம்பிக்கை பொறுப்பினை கலைத்து மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் பிரிவொன்றாக புகை பரீட்சித்தல் செயற்திட்ட அலுவலகமொன்றை தாபிப்பதற்கு 2017 திசெம்பர் 10 ஆந திகதிய DMS/1143/VETF ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கையில் மற்றும் PFD/RED/CIR/2108/12 ஆம் இலக்க 2018 ஆகஸ்ட் 18 திகதிய திறைச்சேரி செயலாளரின் கடிதத்தின் ஊடாக நிதியத்தினை கலைப்பதற்கு பரிந்துரை பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கையில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் பிரிவொன்றாக தாபிக்கப்படாது அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு புறம்பாக வேறு பதவிகளை பேணிச் சென்று சம்பளம் மற்றும் படிகளை கொடுப்பனவு செய்யப்பட்டு நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | வாகன புகை பரிசோதனை நிதியத்தை கலைப்பது தொடர்பாக இதுவரை இறுதி தீர்மானத்திற்கு வராதிருந்ததுடன் இந்த அலுவலகத்தின் மூலம் புகை பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குபடுத்தும் செயற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒரே நிறுவனமாக இருப்பதால் வாகன புகை பரிசோதனை செயற்திட்ட அலுவலகத்தின் பணிகள் மற்றைய பொதுவான பணிகளை பார்க்கிலும் மேலதிக தகைமைகளை உடைய பதவியணியின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. அதற்காக பதவியணியினை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி களுக்காகவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் பதவியணிக்காக பதவிப் பெயர்கள் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் 2017.12.10 திகதிய மற்றும் MT/02/01/01/02/11/II ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் செயற்திட்ட அலுவலகத்திற்கான பதவிகள் அரசின் அங்கீகரிக்கப்பட்ட சேவைகளிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள மையினால் தற்போது நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அச் சேவைகளுக்கு உள்ளீர்க்கப்படுதல் தொடர்பில் பிரச்சனையொன்று எழுந்துள்ளது. அவ்வாறே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால், அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களின் | முகாமைத்துவ சேவைகள் திணைக்கள கடிதத்தின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | பிரகாரம் செயற்திட்ட அலுவலகத்தின் செலவினம் நிதியத்தின் மூலம் ஈடுசெய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. ஆதலால் நிதியம் தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானம் கிடைக்கும் வரை கடமை நிறைவேற்றுதல் என்ற அடிப்படையில் மேற்படி நடவடிக்கைகள் நிறைவேற்றும் அடிப்படையில் மேற்குறித்த வகையில் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிய தருகின்றேன். | |
| (ii) | ஒரு குறிப்பிட்ட பதவி தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்பளத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பதவி தொடர்பான வேலை விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகள் மற்றும் அத்தகைய செயற்பாடு களுக்கு மேலதிக கட்டணம் உரித்தாகாது. ஆனால், பணி விவரிப்பில், புகைப் பரிசோதனை நிகழ்ச்சிகள் நடத்துதல், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்ற புகை பரிசோதனைக்குரிய பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ள 13 திட்ட உதவியாளர்கள், ஆராய்ச்சி உதவியாளர்கள், திட்ட தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு நிதி அமைச்சின் அனுமதியின்றி, வேலை விவரத்தின் பிரகாரம் செய்ய வேண்டிய பணிகள், பணிப்பாளர் குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் நாள் ஒன்றுக்கு ரூபா .2,000 வரவுப் படித் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில், மேற்படி விடயத்திற்கு முறையான அனுமதியின்றி ரூபா 846,175 கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. | நிதியத்தின் செயற்பாடுகளை செயற்திறனாக மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்களின் பங்களிப்பைப் பெறுவதற்காக, நம்பிக்கை பொறுப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம், நிதியக் குழுவின் அங்கீகாரத்துடன் இந்தக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு உத்தியோகத்தர் இணைந்த படி கோரும் சந்தர்ப்பத்தில் இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது. | முறையான அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதி அமைச்சு அல்லது தொடர்புடைய சம்பள அதிகார அமைப்புகளின் அங்கீகாரம் இல்லாமல் 21 திசெம்பர் 2022 பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2022/04 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் பேரில் | நிதியத்தினன் செயறபாடுகளை செயற்திறனாக மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்களின் பங்களிப்பைப் பெறுவதற்காக, நிதிய ஒப்பந்தத்தின்படி, நம்பிக்கைப பொறுப்பின் அங்கீகாரத்துடன் டன் இந்தக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. | முறையான அங்கீகாரத்தின் பேரில் செலவினங்களை மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாதமொன்றுக்கு ஆகக் கூடியது 06 தடவை புகை பரிசோதனை நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு பெறச் செய்யப்படும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்ற வெளி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தலா ரூபா. 2,000 வீதம் படியும், க்ளீன்கோ லங்கா மற்றும் லாப் ஈகோ ஸ்ரீ தனியார் கம்பனிகளின் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு ரூபா 1,000 ஒரு முறை கொடுப்பனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் முறையான அனுமதியின்றி மேற்படி விடயத்திற்கு ரூபா 1,230,500 கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (iv) | புகை பரிசோதனை நிதியத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மூன்று திட்ட உதவி உத்தியோகத்தர்கள், பத்து தொழில்நுட்ப வல்லுநர்கள், இரண்டு சாரதிகள் மற்றும் இரண்டு அலுவலக உதவியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களது ஒப்பந்தங்கள் 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் காலாவதியாகி இருந்தன. ஆனால் மேற்கூறிய ஒப்பந்தங்களை நீடிக்காமல் அல்லது புதுப்பிக்காமல், மீளாய்வாண்டில் பதினேழு உத்தியோகத்தர்களை சேவை சட்ட ரீதியான அடிப்படை ஒன்று இல்லாமல் பணி அமர்த்தி ரூபா 8,585,980 ஆன சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | இங்கு குறிப்பிட்டப்பட்ட சகல உத்தியோகத்தர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக அனைத்து ஆண்டுகளுக்குரிய நம்பிக்கை பொறுப்பு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினை ஒழித்து தற்போது சேவையில் ஈடுபடுத்தியுள்ள ஆட்களை நிரந்தர சேவைக்கு உள்ளீர்க்கும் நோக்கில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் உரிய கடிதங்கள் மற்றும் சேவை உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளதாக அறிய தருகின்றேன் | முறையான அங்கீகாரத்தின் பேரில் செலவினங்களை மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஏற்பாட்டில் ஏனைய வெளிவாரி நிறுவனங்களுக்கு நிதியம் வழங்கல் என உள்ளடக்கப்படாதிருக்கையில் மற்றும் நிதி அமைச்சின் அல்லது வரிசை அமைச்சின் அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் 2023 ஆகஸ்ட் 17 ஆந் திகதி சுற்றாடல் அமைச்சிற்கு ரூபா 1,383,500 தொகை கையளிக்கப்பட்டிருந்தது. | புகை பரிசோதனை நிதியத்தை தாபித்ததன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்குரிய செயற்பாடுகளுக்கான நிகழ்ச்சித்திட்ட மொன்றுக்காக பொறுப்பு உடன்படிக்கையின் பிரகாரம் நம்பிகை பொறுப்பு சபையின் அங்கீகாரத்தின் பேரில் நிதியம் வழங்கப்பட்டது. | முறையான அங்கீகாரத்தின் பேரில் செலவினங்களை மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | புகை பரீட்சித்தல் உபாகரணங்கள் தொடர்பாக 2020 சனவரி 16 ஆந் திகதி மற்றும் நவம்பர் 03 ஆந் திகதி நிதியம் நம்பிக்கை பொறுப்பு சபையுடன் எடுத்துள்ள தீர்மானத்தின் பிரகாரம் மொத்த கிரயம் ரூபா 82.752 மில்லியனான Eco Tech மாதிரி சுற்று வளியின் தரத்தினை அளவிடும் 02 அளவீட்டு உபகரணங்களை மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் குறித்த நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள உபகரணங்களின் செயற்பாட்டு திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு சேவைகளுக்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாத ரூபா 3,437,358 ஆன தொகை புகை பரிசோதனை நிதியத்திற்கு உரியதல்லாத கிரயமொன்று மேற்கொள்ளப் பட்டிருந்தது. | ஒட்டுமொத்த காற்று மாசுபாட்டைக் குறைக்கும் நோக்கத்துடன் வாகன புகை பரிசோதனை பொறுப்பு நிதியம் நிறுவப்பட்டது. அதன் பிரகாரம், வாகனங்கள் உட்பட மற்றும் பிற ஆதாரங்களால் ஏற்படும் காற்று மாசுபாட்டைக் குறைக்க, விஞ்ஞான அளவிலான காற்று நிலை அளவீட்டு கருவிகளை வாங்கி, நிலையானதாக பராமரிக்கவும், அதிக பணம் செலவழிக்கவும் அவசியம். இந்த நிதியின் முதன்மை நோக்கங்களில் ஒன்று காற்றின் தரத்தை மேம்படுத்துவதாகும்.<br>அத்தகைய நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்திற்கு மேலதிக செலவினை மேற்கொள்ள விடாமல் ஒதுக்கப்படும் பணத்தை இந்த நிதியத்தின் மூலம் நிதிஏற்பாடு செலவிடல் இடம்பெறுகின்றது. அதன் பிரகாரம் காற்றின் தரம் குறித்த சரியான தகவல்களைப் பெறுவதற்கு கொள்கை தீர்மானங்களுக்கு வருவதற்காக அரசு நிறுவனங்களுக்கு்று இவ்வாறு பணம் வழங்கப்பட்டுள்ளது. | செலவினைக் கட்டுப்பாட்டிற்கு ரிய முறையான நடைமுறையொன்று தயாரித்தல் |
| (vii) | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆனையாளர் நாயகம் ஆகியோருக்கிடையே இடையே ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்த மொன்றின் அடிப்படையில் ரூபா 30.82 மில்லியன் செலவில் 2013 ஆம் ஆண்டில் நடமாடும் சுற்றுபுர காற்றின் தர மேற்பார்வை மத்திய நிலையமொன்று மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் அவ் உபகரண தொகுதி செயலற்று போதல் மற்றும் பழுபார்த்தலுக்குரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளாமை காரணமாக குறித்த உபகரண தொகுப்பு மற்றும் அவ் உபகரண தொகுப்பு தாபிக்கப்பட்டுள்ள லொறி எந்தவொரு பயன்பாடும் இன்றி பழைமையாவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.<br>ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்த | 16.01.2020 அன்று நடைபெற்ற நம்பிக்கைப் பொறுப்பு குழுக் கூட்டத்தில், பல ஆண்டுகளாக இத்தொகுதி செயற்படாமல் இருந்ததால், அலகு புதுப்பிக்கப் பட்டாலும், அப்பழுதுபார்ப்பு வெற்றிகரமாக சரியாக தரவுகள் பெற்று ஆக்கபூர்வமான துல்லியமான தரவு பயனுள்ள காற்றோட்ட அளவீடு தொடர்பான தொழில்நுட்ப அறிக்கையொன்று சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. .<br>இதன் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மூலம் இந்தப் புனரமைப்பு தொடர்பாக பின்வரும் பரிந்துரைகளை வழங்குமாறு பொறுப்பு சபைக்கு அறிவித்துள்ளது.<br>.<br>01.இந்த “Environment SA” அடுத்த நடமாடும் சுற்றுப்புற காற்று நிலை அளவீட்டு அலகு மாற்றத்திற்குப் பிறகு அனைத்து பகுப்பாய்வு களிடமிருந்தும் துல்லியமான தரவைப் பெறலாம் எனவும் | அரச வளங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் . |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் தொகுதியின் சட்டரீதியான உரித்து மற்றும் பராமரிப்பு பொறுப்பு நிதியத்திடம் காணப்படுகின்றமையினால் அவ் உபகரணங்களை பழுதுபார்ப்பதா அல்லது கைதவிர்ப்பு செய்வதா என சரியான நேரத்தில் தீர்மானிக்கப்பட்டு குறித்த வண்ணம் நடவடிக்கை எடுப்பதற்கு நிதியத்தின் முகாமைத்துவம் தவறியிருந்தது. | 02.இந்த உபகரணத்தின் தொழில் நுட்பம் தற்போது உள்ள அமைப்புகளுடன் நாளதுவரையாக நிலையிலும் ஏற்கனவே இணக்கமாகவும் உள்ளது.<br><br>இதன் பிரகாரம், நிலையான உபகரணங்களாகவும் பயிற்சி நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தக் கூடிய திறனின் அடிப்படையில் இந்த உபகரணங்கள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளன. | |
| (viii) | காற்றின் தரம் மற்றும் தரவு முகாமைத்துவ முறைமையின் ஒருங்கிணைப்பு மற்றும் விநியோகத்திற்கான தேசிய தளத்தை மேம்படுத்துவதற்காக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு சமர்ப்பித்த முன்மொழிவை முத்தரப்பு நடைமுறைப்படுத்து வதற்காக, 2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் மூலம் ரூபா 150 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மேற்படி பணிகளுக்குரிய செயற்பாடுகள் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்படவில்லை.<br>இணங்கப்பப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம், தொடர்புடைய நிறுவனங்கள் செய்ய வேண்டிய வேலையின் செயன் முன்னேற்றத்தை சரிபார்த்து, அதற்கான கொடுப்பனவுகளைச் செய்ய வேண்டும் என்றாலும், முன்னேற்றத்தை சரிபார்க்காமலும், செய்ய வேண்டிய வேலையை உறுதிப்படுத்தாமலும் ரூபா 9 மில்லியனை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | குறித்த செயற்பாடுகளை ப மேற்கொள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பணம் வழங்கப்பட்டுள்ளது. | நிதியத்தை கவனமாகச் செலவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ix) | நிதியத்தால் முதலீடுகளைச் செய்வதற்கு முன்னர், நிதியமைச்சரின், திறைசேரிச் செயலாளர் மற்றும் அமைச்சரவை அனுமதியின்றி, நிதியத்தின் மிகை தொகையிலிருந்து ரூபா 500,000,000 வரை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | மிகை நிதி வாகன புகை பரிசோதனை நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையிடமிருந்து பெற்றுக்கொண்ட அங்கீகாரத்திற்கு உட்பட்டு பொது திறைசேரிக்கு மாற்றப்பட்டது. ஆதலால் 2023 ஆம் ஆண்டின் போது பொது திறைசேரியின் வேண்டுகோளின் அடிப்படையில் நம்பிக்கை பொறுப்பு | முதலீடு செய்யவோ அல்லது அரசின் பணத்தின் முறைப்படி திரட்டு நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்தின் கணக்கின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 வரை திரட்டிய இலாபம் ரூபா 612.023 ஆக இருந்த போதும் அதன் திரட்டிய இலாபத்தை திரட்டு நிதிகது செலவு வைக்காமல் ரூபா 551.888 மில்லியன் நிலையான வைப்புக்களிலும் ரூபா 60.135 மில்லியன் சேமிப்பு வைப்புபக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிதியத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு ரூபா 200,000,000 பொது திறைசேரிக்கு மாற்றப்பட்டது. கணக்கில் மிகை பணம் இருக்கும் போது நம்பிக்கை பொறுப்பு உடன்படிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரி பிரதி செயலாளர் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஆலோசனையின் பிரகாரம் மேவுகை அங்கீகாரத்திற்கு உட்பட்டு தற்போது கணக்கில் காணப்படும் மக்கள் வங்கியில் குறுங்கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது. எனினும் திறைசேரியின் மிகை தொகையில் ஒரு பகுதியை தருமாறு செய்யப்பட்ட வேண்டுகோளுக்கு திறைசேரிக்கு நிதி வழங்கப்பட்டது. நிதியத்தின் மிகை கணம் அரச நிதித் திணைக்களத்தின் வேண்டுகோளின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பின் அங்கீகாரத்திற்கு மாத்திரம் உட்பட்டு மாத்திரம் திரட்டு நிதிக்கு செலவு வைக்கப்படும் அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 200 மில்லியன் தொகை திறைசேரிக்கு செலவு வைக்கப்பட்டுள்ளது | |
| (x) | நிதியத்தினால் சேகரிக்கப்படும் வருமானம் காலரீதியில் நிதியத்தின் குறுகிய கால மற்றும் நீண்ட கால முதலீடுகளில் நிதியின் நோக்கங்களுக்கு இணங்கும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் பெறப்பட்ட வருமானத்தில் ரூபா 165 மில்லியன் வரை அத்தகைய ஆக்கபூர்வமான முதலீடுகளில் பயன்படுத்தப்படாமல் சேமிப்புக் கணக்கில் சேமிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் அண்மித்த அளவில் சுமார் ரூபா 8,568,535 ஆன வட்டி வருமானத்தை இழந்துள்ளது. | 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுக்கும் போது திடீரென ஏற்படும் செலவினங்களை செலவிடுவதற்காக ஏதேனும் பணத்தை சேமிப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டது. மேலும் நம்பிக்கை பொறுப்பு சபையின் ஆலோசணையினக் பிரகாரம் ஏனைய மிகை பணம் முதலீடு செய்ய்பபட்டன. | நிதியத்தை ஆக்கபூர்வமாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வாகனங்கள் தொடர்பான வளி மாசடைவு, இலங்கையில் பிரதான நகரங்களில் வளியின் தரம், வலுசக்தி சுற்றாடல் மற்றும் பொருளாதார தாக்கல்கள் போன்ற வெவ்வேறு பரிசோதனைகளுக்காக 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை புகை பரிசோதனை நிதியத்தின் ஊடாக ரூபா 29.52 மில்லியன் செலவினமொன்று ஏற்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டத்தில் இருந்து இறுதி அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு எந்தவொரு சாதகமான செயற்பாட்டிற்கா கவும் வேலைத்திட்டமொன்று தயாரித்து செயற்படுத்தப்பட்டு செயற்படுத்தியிருக்க வில்லை | தற்போது அனைத்து பரிசோதனை அறிக்கைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்வதுடன் பரிசோதனை அறிக்கைகள் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பரிந்தரைகளை செயற்படுத்தல் மற்றும் குறித்த தரவுகளை அது தொடர்பில் ஆர்வமுள்ள தரப்பினருக்கும் சுற்றாடல் அமைச்சின் வளி வள முகாமைத்துவ அலகிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துக் கொள்வதுடன் எங்கள் வலைத் தளத்திலும் சுற்றாடல் அமைச்சின் வலைத்தளத்திலும் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி அறிக்கைகளை சாதகமான நடவடிக்கையொன் றுக்காக பயன்படுத்த வேலைத் திட்டமொன்று தயாரித்தல்˙. |
| (ii) | புகை பரிசோதனைக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ள இரண்டு தனியார் நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் பத்தி 4.1 ஆம் பந்தியின் பிரகாரம், ஒப்பந்ததாரர்களால் நாளாந்த வருமானத்தில் 10 சதவீதத்தை ஏழு நாட்களுக்குள் புகை பரிசோதனை நிதியத்திற்கு அனுப்ப வேண்டும். ஒப்பந்தம் செய்த ஒரு கம்பனி மேற்கண்ட நிபந்தனையை பூர்த்தி செய்வதற்காக புகை பரிசோதனை நிதியத்திற்கு உரிய தொகையை ஏழு நாட்களுக்குள் செலுத்தியிருந்த போதும் ஆனால் மற்ற ஒப்பந்த நிறுவனம் மேற்கூறிய நிபந்தனையை பூர்த்தி செய்ய தொடர்புபட்ட காலத்திற்குள் நிதியத்திற்கு பணத்தை அனுப்பவில்லை. உடன்படிக்கை பிரகாரம் 3 சதவீதம் மேலதிக கட்டணத்தை வசூலிக்கப்பட வேண்டிய போதிலும், அத்தகைய மேலதிக கட்டணத்தை அறவிடுவதற்கு புகை பரிசோதனை நிதியத்தால் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன். கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டின் படி, 2023 ஆம் ஆண்டில் ஒரு நாள், | கம்பனிகளுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் பிரகாரம், வாகன புகை பரிசோதனை மூலம் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை 07 வேலை நாட்களுக்குள் பெறப்பட வேண்டும். அதன் பிரகாரம், பணம் பெறப்பட்டது அதன் பிரகாரம் நிதி கிடைத்துள்ளதுடன் விலலொன்று அவதானிக்கப்படவில்லை. . மேலும், இந்த ஏற்பாட்டை எளிதாக்குவதற்காக நாளாந்த பணத்தை அடுத்த நாள் செலவு வைக்குமாறு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது அதற்கேற்ப தினசரி பணத்தை செலவு வைக்கின்றனர் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். 2024 ஜனவரி முதல், அன்றாட வருமானம் இனங்காணக்கூடிய வகையில் இரண்டு புகைக் பரிசோதனை நிறுவனங்களிடமிருந்தும் அறிக்கைகளை பெற்றுக்கொள்வது இடம்பெறுகின்றது. | வருமானத்தை முறையாக இனங்காண்பதற்கு உரிய நடைமுறை யொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டு நாட்கள் மற்றும் மூன்று நாட்கள் என தாமதமாக செலுத்தியதற்காக ரூபா 1,189,569 மிகை அறவீடொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. கம்பனியால் தினந்தோறும் சேகரிக்கப்படும் வருமானத்தை கண்டறிய நிறுவனங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பிக்காததால், ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமதக் கட்டணங்களைக் கணக்கிடுவது சிக்கலாக இருந்தது. | | |
| (iii) | புகை பரிசோதனை தொடர்பான விழிப்புணர்வு திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள், அந்த இலக்குகளை அடைந்துகெள்ள செய்ய வேண்டிய செயற்பாடுகள், செயன் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோல்கள், புகை பரிசோதனை திட்டங்களுக்கான மேற்கொள்ளப்படுகின்ற செலவினங்கள் பற்றிய முன் மதிப்பீட்டுடன் தொடர்பான செயற்திட்ட அறிக்கையை அங்கீகரிக்காமல் மீளாய்வாண்டின் போது விழிப்புணர்வு திட்டங்களுக்காக ரூபா 4,308,425 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இத்திட்டத்தை மேலும் பயனுள்ளதாக மேற்கொள்வதற்காக புகை பரிசோதனை நிலையங்களால் அந்த பரிசோதனைப் பணிகளை முறையாக மேற்கொள்ள வேண்டும் மற்றும் பங்கேற்கும் வாகன உரிமையாளர்கள் / சாரதிகள் இது குறித்து முழுமையாக அறிந்திருக்க வேண்டும். மேலும், சட்டத்தை அமல்படுத்தும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் இது தொடர்பாக அறிந்து இருக்க வேண்டும். அதன் பிரகாரம் எங்களின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகிளன் பிரகாரம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த திட்டம் முற்றிலும் தொழில்நுட்ப அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால், புதுப்பிக்கப்பட்ட தகவலைப் பற்றி அறிந்திருப்பது அவசியம். மேலும், இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம், பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்த திட்டத்திற்கு தங்கள் நேரடி பங்களிப்பை வழங்குவதுடன் மேலும் ஒவ்வொரு விழிப்புனர்வு நிகழ்ச்சி முடிவிலும் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் சிறந்த பொறுப்பேற்றல் கிடைத்துள்ளன. | நிதியத்தை ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுத்தல் |

இந்த புகை பரிசோதனை வேலைத் திட்டத்திற்குரிய நம்பிக்கை பொறுப்பு உறுதியில் (DEED OF TRUST) உள்ளடக்கப்பட்டுள்ள 07 இணைப்புகளிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. விளைவற்ற வகையில் வைக்காமல் பயன்படுத்த வேண்டும்.

**3.3 விளைவற்ற அல்லது குறைப் பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

-

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புகை பரிசோதனை நம்பிக்கை நிதியம் ரூபா 82.75 ஆன செலவினமொன்றினை ஏற்று இரண்டு சுற்றுப்புற வளியின் தரத்தினை அளக்கும் அலகுகளை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு மற்றும் ரூபா 47.24 மில்லியன் கிரயத்தினை உடைய நடமாடும் சுற்றுப்புற வளி தரத்தினை அளக்கும் உபகரணத்தினை கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் வழங்கியிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த உபகரணங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளும் அளவீட்டு தரவுகள் நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் மேற்படி வளி தர அளவீட்டு உபகரணத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட அளவீட்டு தரத்தினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய பணி தொடர்பாக முன் குறிப்பு வேலைத்திட்டம் இல்லாமை மற்றும் அவ் அளவீட்டு தரவுகளைப் பயன்படுத்தி எந்தவொரு பயனுள்ள பணியொன்றும் மேற்கொள்ளப்படாமை காரணமாக ரூபா 130 மில்லியனிற்கு அதிகமான அரச நிதி முதலீடு மற்றும் உபகரணங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த அளவீட்டு தரவுகள் விளைவற்றதாக காணப்பட்டது | இந்த உபகரணத்தை கொள்வனவு செய்வதன் முக்கிய நோக்கம், வளித் தர முகாமைக்குத் தேவையான தரவுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பொது மக்களுக்குக் காட்சிப்படுத்துவதாகும். அதன் பிரகாரம், காற்றின் AIR QUALITY INDEX தரக் குறியீடு உருவாக்கப்பட்டு, அவற்றைச் சுற்றியுள்ள காற்றின் தரம் காட்டப்படும். மேலும், இந்த அலகுகள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் தரவு, ஆர்வமுள்ள தரப்பினருக்கு தரவுகளைக் கிடைக்கச் செய்வதற்காக, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் இணையத் தளங்களில் காட்டப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக், இந்தக் காற்றின் தர முகாமை தொடர்பான கொள்கைகள், தீர்மானங்கள் மற்றும் செயல்பாடுகளை அறிந்து கொள்வதற்காக சுற்றாடல் அமைச்சின் காற்றுத் தர முகாமை நிலையத்தால் இந்தத் தரவுகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | சொத்துக்களை விளைவற்ற வகையில் வைக்காமல் பயன்படுத்துதல் |